**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. S.M. HARISH ROUGH STONE QUARRY, LEASE OVER AN EXTENT OF 2.00.0 HA, S.F.NO. 755 (PART), PANCHAKSHIPURAM VILLAGE, HOSUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 04.05.2023 AT 10.30 AM AT M/S.CMK KALYANA MANDAPAM, NAGONDAPALLI, DENKANIKOTTAI MAIN ROAD, HOSUR – 635 109.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. R. Saranya, I.A.S., | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. R.Ranga Raj | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Er. P.Krishnan | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 5 | Thiru. S. M. Harish | : | The Proponent<br>Thiru. S.M.Harish Rough Stone Quarry |
| 6 | Thiru.Gopinath | : | EIA Consultant,<br>M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 121 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil `Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed

Thiru. S.M Harish Rough stone quarry, lease over an extent of 2.00.0 Ha, S.F.No. 755 (Part), Panchakshipuram Village, Hosur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 01.04.2023 and bit notices regarding public hearing was issued to the public of Gopanapalli Village, Kulichandram Village, Devaganapalli Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to express their views and comments about the proposed rough stone quarry project.

Thereafter, Thiru.Gopinath EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Ramamoorthy, Masinayakanapalli Village:**

Thiru. Ramamoorthy has said that, He is living in Masinayakanapalli Village and the quarry work is been carrying out in Panchachipuram village for about 20 years, about 4 and 5 quarries are running in this village. Also, my agricultural land is near 300 meters from the quarry. There, we are farming. He said that, there was no problem or any impact due to already existing quarries. So, he welcomed the proposed quarry project.

2. **Thiru. Krishnamoorthy, Masinayakanapalli Village:**

Thiru. Ramamoorthy has said that, He is living in Masinayakanapalli Village. At least 10 numbers of people should be provided employment through this proposed quarry project. Further, he stated that, the quarry work is been carrying out in Panchachipuram village for about 25 years. But, there was no problem or any impact due to already existing quarries. So, he welcomed the proposed quarry project.

3. **Thiru. Umesh , Koratagiri Village:**

Thiru. Umesh has said that, He is living in Koratagiri Village. He said that, our Korattagiri village is located very nearer to the proposed quarry at Panchatsipuram village. Also, there is a river, a water reservoir and a lake is located there. He pointed that, there is no mention of them in the power point presentation. Further, he said that, houses in our village are cracked and the villagers are suffering from respiratory problems and suffocation due to the quarry activities.

4. **Thiru. Manjunath , Alagiri Village, Koratagiri Post:**

Thiru. Manjunath has said that, they are affected by the already existed quarries and there is a famous Manuneethimunisvaraswamy temple located near the proposed quarry where the special pujas are held every week and also there are hills adjacent to the temple. Near the hill, there is a river flowing called Samatuva Nathi. He said that our livelihood depends on that river and that is the

only source for their agriculture, only the vegetables and other products cultivated here are taken to the farmers' markets.

**The DEE, TNPCB, Hosur :**

The DEE, TNPCB, Hosur has asked the EIA consultant of the proposed quarry project to inform them about the distance between the quarry and the river.

**Reply:**

EIA consultant of the proposed quarry project has replied that, the distance between the quarry and the stream is about 400 meters and it is mentioned in the power point presentation.

**5. Thiru. Krishnappa , Koratagiri Post:**

Thiru. Krishappa has said that, Since 2009, there are 5 bore wells have been drilled to avail water but everything has dried up and no use of it. Therefore, agriculture could not be done. After taking a loan of Rs 25 lakh from the bank to building a house, the walls of the house got cracked due to quarrying. Also, children and villagers were suffering from suffocation. So, he gave his objection to the proposed quarry.

**6. Tmt. Jaya Nagaraj , Thandarai Post:**

Tmt. Jaya Nagaraj has said that, we have been protesting against the operation of existing quarries for a year. Now again they proposed to a new quarry, so we strongly object that. Due to those quarries, we are affected in many ways. So, we object the proposed quarry project coming as the ninth quarry in addition to that existing quarries. A school is located near the quarry. Due to the quarry activities, it affects the children's education. Because, hundreds of heavy vehicles are passing through the road where the school is located. As a result, children could not able to go school. Agriculture is completely affected. Ground water level has decreased. More than 20 bore wells have all dried up. The establishment of this quarry will not provide any livelihood to the nearby villagers.

Our health is affected mainly by the quarry activities. We have the documents for that. Pregnant women have miscarriages and breathing problems. Therefore, she said that no permission should be given to the upcoming proposed quarry project.

**7. Thiru. Mathanagiriyappa , Kammayur Village:**

Thiru. Mathanagiriyappa has said that, I have 15 acres of agricultural land at a distance of 150 meters from the proposed quarry. Our agriculture was not affected by the existing quarries. Therefore, he said that, he has no objection to the proposed quarry project.

**8. Tmt. Puttama , Koratagiri Village:**

Tmt. Puttama has said that, Dust is emanating due to the quarry activity and we are not able to farm. Further, she said that, we are getting sick due to quarry activity.

**9. Tmt. Gowramma , Koratagiri Village:**

Tmt. Gowramma has said that, Due to the quarry activity, we are unable to graze goats and cows. Goats and cows die after drinking contaminated water from the river near the quarry. She said that, if you give permission for proposed quarry, we will die.

**10. Thiru. Chittapa , Koratagiri Village:**

Thiru. Chittapa has said that, if you give permission for the proposed quarry, we will be affected. Therefore, we object the proposed quarry project.

**11. Tmt. Saradhama , Koratagiri Village:**

Tmt. Saradhama has said that, we object to this proposed quarry. Because school-going children and pregnant women will be affected by this proposed quarry. He also said that, blasting in already existing quarries causes cracks in nearby residential houses.

12. **Tmt. Puttama , Agraharam Village:**

Tmt. Puttama has said that, we object to this proposed quarry. She said, I have two daughters and her house has been damaged due to blasting in the quarry and she could not able live in that house.

13. **Thiru. Harish, Koratagiri Village:**

Thiru. Harish has said that, if you give permission for the proposed quarry, we will be affected more. Therefore, we object the proposed quarry project.

14. **Thiru. Irudayaraj, Koratagiri Village:**

Thiru. Harish has said that, if you give permission for this proposed quarry, we will not be able to farm. Many goats and cows have died due to the operation of the existing quarries and no action has been taken by the existing quarries. Dust emanating near the school due to passage of heavy vehicles carrying with mined stones. So, the school students are affected. He warned that, if permission is given to the quarry in spite of this, we will go directly to the quarry and protest.

15. **Tmt. Gowramma , Koratagiri Village:**

Tmt. Gowramma has said that, her children are affected, when they walk on the road due to the heavy vehicles movement from the existing quarry. Further, she asked not to give permission for the proposed rough stone quarry.

16. **Thiru. Amrish, Kamayaur Village:**

Thiru. Amrish has said that, Kamaiyur village is nearer to the proposed quarry than the Korattagiri village. Our village was not affected by the existing quarries. I have graduated with engineering degree and I got employment in the existing quarry. This has improved our family's livelihood. Therefore, he said that he has no objection to the proposed quarry project and I fully support for the same.

**17. Tmt. Pushpa , Koratagiri Village:**

Tmt. Pushpa has said that, our residence is located near the existing quarry. A lot of dust is generated from that quarry. Our children are affected when they going to school due to the quarry activity. We are daily wage workers. We object the proposed rough stone quarry project. Therefore, we respectfully request you not to grant permission for proposed rough stone quarry project.

**18. Thiru. Srinivas, Kamayaur Village:**

Thiru. Srinivas has said that, the proposed quarry is located 500 – 600 meters from our land. The establishment of this quarry will cause a lot of damage. Further, he said that, the agriculture has been affected due to blasting and dust emanation generated from the existing quarry activities.

**19. Thiru. Nagaraj Reddy, Denkanikottai :**

Thiru. Nagaraj Reddy has asked that, "are the quarries, which have been operating for 20 years already, operating properly as per the guidelines laid down by the government?" and he requested that, after conducting the survey for ensuring the proper operation of the existing quarries with that positive results, then you can give permission for the proposed quarry. For that, the public will not object. Further, he firmly states his opinion that, we should never give permission for a new quarry when the existing quarries are not functioning properly.

**District Environmental Engineer, TNPCB, Hosur:**

District Environmental Engineer, TNPCB, Hosur has said that, public who have objection to the proposed quarry can give their petitions.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of

Tamilnadu - Chennai.

Further, 43 number of petitions were received on the proposed M/s. Thiru. S.M Harish Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that 77 number of written representation were received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

15/5/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Sub Collector**
**Hosur**

**District Collector**
**Krishnagiri**

3

**கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், பஞ்சாட்சிபுரம் கிராமத்தில், சர்வே. எண். 755 (பகுதி), உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். எஸ்.எம்.ஹரிஷ் ரப் ஸ்டோன் குவாரி 2.00.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 04.05.2023 அன்று தேன்கனிக்கோட்டை மெயின் ரோடு, நாகொண்டபள்ளி, ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தி/ள். CMK கல்யாண மண்டபத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R. சரண்யா, I.A.S., | : | சார் ஆட்சியர், ஓசூர், (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er. R. இரங்கராஜ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | Er.P.கிருஷ்ணன் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 5 | திரு. S.M.ஹரிஷ் | : | உரிமையாளர் தி/ள். எஸ்.எம்.ஹரிஷ் ரப் ஸ்டோன் குவாரி |
| 6 | திரு. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 121 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். எஸ்.எம்.ஹரிஷ் ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் தி/ள். எஸ்.எம்.ஹரிஷ் ரப் ஸ்டோன்

குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 01.04.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், கோபனப்பள்ளி, கூலிசந்திரம், தேவகானப்பள்ளி ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் ஒளி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். எஸ்.எம்.ஹரிஷ் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். எஸ்.எம்.ஹரிஷ் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட்

5

லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. ராமமூர்த்தி, மாசிநாயக்கனப்பள்ளி கிராமம்:**

திரு. ராமமூர்த்தி அவர்கள், தான் மாசிநாயக்கனப்பள்ளியில் வசித்து வருகிறேன் என்றும் பஞ்சாட்சிபுரம் கிராமத்தில் சுமார் 20 வருடமாக குவாரி பணியை மேற்கொண்டு வருகிறார்கள் என்றும், இக்கிராமத்தில் சுமார் 4 மற்றும் 5 குவாரிகள் இயங்கி வருகின்றன என கூறினார். மேலும், என்னுடைய விவசாய நிலமானது குவாரியிலிருந்து 300 மீட்டர் அருகில் உள்ளது. அங்கு, நாங்கள் விவசாயம் செய்து கொண்டு இருக்கிறோம். குவாரியால், எந்தவித பிரச்சனையும் எந்தவித பாதிப்பும் இல்லை என்று கூறி உத்தேசிக்கப்பட்ட குவாரி திட்டத்தை தான் வரவேற்பதாக தெரிவித்தார்.

**2. திரு. கிருஷ்ணமூர்த்தி, மாசிநாயக்கனப்பள்ளி கிராமம்:**

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தான் மாசிநாயக்கனப்பள்ளியில் வசித்து வருகிறேன் என்று கூறினார். இந்த உத்தேசிக்கப்பட்ட குவாரியின் மூலமாக குறைந்தது 10 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் எனவும், பஞ்சாட்சிபுரம் கிராமத்தில் 25 வருட காலங்களாக குவாரி பணி மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று கூறினார். மேலும், உத்தேசிக்கப்பட்ட குவாரி திட்டத்தை தான் வரவேற்பதாக தெரிவித்தார்.

**3. திரு. உமேஷ், கொரட்டகிரி கிராமம்:**

திரு. உமேஷ் அவர்கள் தான் கொரட்டகிரி கிராமத்தில் வசித்து வருவதாகவும், பஞ்சாட்சிபுரம் கிராமத்தில் அமையவுள்ள குவாரிக்கு மிக அருகில் எங்களுடைய கொரட்டகிரி கிராமம் தான் அமைந்துள்ளது என்று கூறினார். மேலும், இங்கு ஒரு மிக பெரிய ஆறு, ஒரு நீர் தேக்க அணை, ஒரு எரி உள்ளது. அவற்றை நிழற்பட விளக்கக்காட்சியில் குறிப்பிடப்படவில்லை என்றும், எங்கள் கிராமத்தில் உள்ள வீடுகள் குவாரிகளின் செயல்பாட்டினால் விரிசல் அடைந்துள்ளது என்றும், அங்குள்ள கிராம மக்களுக்கு சுவாச கோளறு, மூச்சுதிணறல் ஆகியவை ஏற்படுகிறது என்று கூறினார்.

**4. திரு. மஞ்சுநாத், அழகிரிசாமி கிராமம், கொரட்டகிரி அஞ்சல்:**

திரு. மஞ்சுநாத் அழகிரிசாமி கிராமம் அவர்கள், கல்குவாரியினால் எங்களுக்கு பெரிய பாதிப்பு ஏற்படுகிறது என்றும், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியின் அருகில் தான் பிரசித்தி பெற்ற மனுநீதிமுனிஸ்வரசுவாமி கோயில் உள்ளது, அங்கு வாரம் தோறும் விசேஷ பூஜைகள் நடைபெறும், அந்த கோயிலை ஒட்டித்தான் மலைகள் இருக்கிறது. மலையில் அருகில் சமத்துவ நதி உள்ளது. அந்நதியை நம்பிதான் எங்களது வாழ்வதாரம் அமைந்துள்ளது என்று கூறினார். மேலும், அந்த நதியின் மூலமாக நாங்கள் விவசாயம் செய்கிறோம், இங்கு

விவசாயம் செய்கின்ற காய்கறிகள் மற்ற பொருட்கள் தான் உழவர் சந்தைகளுக்கு செல்கிறது என கூறினார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள்**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் அவர்களை நோக்கி குவாரிக்கும், நதிக்கும் உள்ள இடைவெளியை தெரிவிக்குமாறு கூறினார்.

**பதில் :**

அதற்கு குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் குவாரிக்கும் ஓடைக்கும் உள்ள இடைவெளி 400 மீட்டர் என்றும், அது நிழற்பட விளக்கக் கண்காட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் அவர் தெரிவித்தார்.

**திரு. மஞ்சுநாத், அழகிரிசாமி கிராமம், கொரட்டகிரி அஞ்சல்:**

திரு. மஞ்சுநாத் அழகிரிசாமி கிராமம் அவர்கள் அது ஓடை கிடையாது என்றும், அது சந்நத்குமார் நதி என்று தெரிவித்தார். மேலும் அரசு பதிவின் (Government Record) படி அந்த நதி அவ்விடத்தில் அமைந்து உள்ளது. அந்த நதியானது தளி தொடங்கி பஞ்சப்பள்ளி (Dam) நீர் அணைக்கட்டு வரையிலும் செல்கிறது என்றார். இந்த நதியினால் பல ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடைகிறது என்று தெரிவித்தார். ஆகவே, இந்த குவாரிக்கு அரசு ஒப்புதல் தருவதை தவிர்த்தால் நாங்கள் இந்த நதியால் நன்மை பெறுவோம் என்று தெரிவித்தார்.

5. **திரு.கிருஷ்ணப்பா, கொரட்டகிரி கிராமம்**

திரு. கிருஷ்ணப்பா கொரட்டகிரி கிராமம் அவர்கள் 2009–ம் ஆண்டிலிருந்து 5 ஆழ்த்துளை கிணறு போட்டும் எவ்வித பயனும் இல்லை எல்லாம் வற்றி போய்விட்டது. அதனால், விவசாயம் செய்யமுடியவில்லை. ரூபாய் 25 இலட்சம் வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டியதில் அவ்வீட்டின் சுவர்களில் குவாரி

செயல்பாட்டால் விரிசல் ஏற்பட்டது. மேலும், குழந்தைகளுக்கும் மற்றும் கிராம மக்களுக்கும் மூச்சு திணறல் ஆகியவை ஏற்படுகிறது. ஆகவே, இந்த குவாரி வருவதற்கு நாங்கள் ஆட்சபேனை தெரிவிக்கிறோம் என்று கூறினார்.

6. **திருமதி. ஜெய நாகராஜ், தண்டறை கிராமம்**

திருமதி. ஜெய நாகராஜ் அவர்கள், நாங்கள் ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகள் இயங்குவதை எதிர்த்து ஒரு வருட காலமாக போரட்டம் நடத்தியுள்ளோம். இப்பொழுது மீண்டும் ஒரு குவாரி அமைப்பதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கிறோம். இக்குவாரிகளால், பலவிதத்தில் நாங்கள் பாதிப்பு அடைந்துகொண்டிருக்கிறோம். இப்பொழுது புதிதாக மீண்டும் ஒன்பதாவது குவாரியாக இக்குவாரி வருவதற்கு நாங்கள் ஆட்சபேனை தெரிவிக்கிறோம். மேலும், குவாரி அருகில் பள்ளி கூடம் அமைந்துள்ளது. இதனால் குழந்தைகளின் படிப்பு பாதிப்படைகிறது. ஏனென்றால் நூற்றுக்கணக்கான கனரக வாகனம் பள்ளி அமைந்துள்ள சாலை வழியாக சென்று வருகிறது. இதனால் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று வர இயலவில்லை. விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டது. 20க்கு மேல் ஆழ்துளை கிணறுகள் எல்லாம் வற்றி போய் உள்ளது. இந்த குவாரி அமைவதினால் அருகில் உள்ள கிராம மக்களுக்கு எந்தவித வாழ்வதாரம் ஏற்பட போவதில்லை. முக்கியமாக குவாரியின் செயல்பாட்டில் எங்களுக்கு உடல்நிலை பாதிப்படைகிறது. அதற்கான ஆவணங்கள் நாங்கள் வைத்துள்ளோம். கர்ப்பிணி பெண்களுக்கு கருச்சிதைவு, சுவாசகோளாறு ஆகியவை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இக்குவாரிக்கு எந்தவித அனுமதியும் அளிக்ககூடாது என்று தெரிவித்து நாங்கள் இக்குவாரி வருவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறோம் என்று தெரிவித்தார்.

7. **திரு. மதனகிரியப்பா, காமையூர் கிராமம்**

திரு. மதனகிரியப்பா, காமையூர் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியிலிருந்து 150 மீட்டர் இடைவெளியில் என்னுடைய 15 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. குவாரிகளால் எங்களுக்கு விவசாயத்தில் எவ்வித பாதிப்பும் இல்லை. எனவே, இந்த குவாரி அமைவதில் தனக்கு எவ்வி பாதிப்பும் இல்லை என்று தெரிவித்தார்.

8. **திருமதி. புட்டம்மா, கொரட்டகிரி கிராமம்**

திருமதி. புட்டம்மா, கொரட்டகிரி கிராமம் அவர்கள், குவாரி செயல்பாட்டால் எங்களால் விவசாயம் செய்ய இயலவில்லை, தூசி அதிகமாக வருகிறது. அதனால், எங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போகிறது என்று தெரிவித்தார்.

9. **திருமதி. கௌரம்மா, கொரட்டகிரி கிராமம்**

திருமதி. கௌரம்மா அவர்கள், குவாரி செயல்பாட்டால் எங்களால் ஆடு, மாடு மேய்க்க இயலவில்லை. குவாரியின் அருகிலுள்ள ஆற்றில் மாசடைந்துள்ள தண்ணீர் குடிப்பதால் ஆடு, மாடுகள் இறந்து விடுகின்றன. இக்குவாரிக்கு நீங்கள் அனுமதி அளிக்கும் பட்சத்தில் நாங்கள் இறக்கும் நிலைதான் ஏற்படும் என்று தெரிவித்தார்.

10. **திரு. சித்தப்பா, கொரட்டகிரி கிராமம்**

திரு. சித்தப்பா, கொரட்டகிரி கிராமம் அவர்கள், இக்குவாரிக்கு நீங்கள் அனுமதி அளிக்கும் பட்சத்தில் எங்களுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கிறோம் என்று தெரிவித்தார்.

11. **திருமதி. சாரதம்மா கொரட்டகிரி கிராமம்**

திருமதி. சாரம்மா, கொரட்டகிரி கிராமம் அவர்கள், இந்த குவாரி வருவதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கிறோம். ஏனென்றால், இக்குவாரியால் பள்ளிசெல்லும் குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மிகவும் பாதிப்படைகின்றனர்.

மேலும், குவாரியில் வெடி வைப்பதினால் குடியிருப்பு வீடுகளில் வெடிப்பு ஏற்படுகிறது என்று கூறினார்.

12. **திருமதி. புட்டம்மா அக்ரஹாரம் கிராமம்**

திருமதி. புட்டம்மா, அக்ரஹாரம் கிராமம் அவர்கள், இந்த குவாரி வருவதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கிறோம். எங்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளது. குவாரியில் வெடி வைத்ததினால் வீட்டில் வெடிப்பு ஏற்பட்டு பாதிப்படைந்துள்ளது. இதனால் எங்களுக்கு குடியிருக்க வீடு இல்லை என்று தெரிவித்தார்.

13. **திரு. ஹரிஷ், கொரட்டகிரி கிராமம்**

திரு. ஹரிஷ், கொரட்டகிரி கிராமம் அவர்கள், இக்குவாரிக்கு நீங்கள் அனுமதி கொடுக்கம் பட்சத்தில் எங்களுக்கு அதிகளவில் பாதிப்பு ஏற்படும் நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கிறோம் என்று தெரிவித்தார்.

14. **திரு. இருதயராஜ், கொரட்டகிரி கிராமம்**

திரு. இருதயராஜ், கொரட்டகிரி கிராமம் அவர்கள், இக்குவாரிக்கு நீங்கள் அனுமதி அளிக்கும் பட்சத்தில் எங்களால் விவசாயம் செய்ய இயலாது. ஏற்கனவே, உள்ள குவாரிகளின் செயல்பாட்டினால் நிறைய ஆடு, மாடுகள் இறந்துவிட்டன அதற்கு ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகள் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை. பள்ளி அருகே, கனரக வாகனங்கள் கற்களை ஏற்றி செல்லும் பொழுது, தூசி எழும்பிகிறது. இதனால், பள்ளி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதையும் மீறி கல்குவாரிக்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில், கல்குவாரிக்கு நேரடியாக சென்று கண்டண போரட்டம் நடத்துவோம் என்று உறுதியாக தெரிவித்தார்.

15. **திருமதி. கௌரம்மா, கொரட்டகிரி கிராமம்**

திருமதி. கௌரம்மா, கொரட்டகிரி கிராமம் அவர்கள், ஏற்கனவே அமைந்துள்ள குவாரியிலிருந்து செல்லும்கனரக வாகனங்களினால் என் குழந்தைகள் சாலையில் செல்லும் பொழுது பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மீண்டும் கல்குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கெண்டார்.

**16. திரு. அமிரிஷ், காமையூர் கிராமம்**

திரு. அமிரிஷ், காமையூர் கிராமம் அவர்கள், இக்குவாரியிலிருந்து கொரட்டகிரி கிராமத்தை விட காமையூர் கிராமம் தான் மிக அருகில் உள்ளது. எங்கள் கிராமத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. நான் பொறியியல் படிப்பு படித்துள்ளேன். இக்குவாரினால் எனக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இதனால் எங்கள் குடும்பத்தின் வாழ்வதாரம் உயர்ந்துள்ளது. எனவே, இக்குவாரி அமைவதற்கு எவ்வித ஆட்சேபனையும், இக்குவாரி அமைவதற்கு முழு ஆதரவு தெரிவிக்கிறேன் என்று கூறினார்.

17. **திருமதி. புஷ்பா, கொரட்டகிரி கிராமம்**

திருமதி. புஷ்பா, கொரட்டகிரி கிராமம் அவர்கள் குவாரிக்கு அருகில் தான் எங்கள் குடியிருப்பு அமைந்துள்ளது. மிகவும் அதிக அளவில் தூசி எழும்புகிறது. எங்கள் குழந்தைகள் பள்ளி சென்று வருவதில் பாதிப்படைகின்றனர். நாங்கள் தினமும் கூலி வேலை செய்து வாழ்வு நடத்தி வருகிறோம். இக்குவாரி அமைவதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறோம். எனவே, பணிவுடன் இக்குவாரிக்கு அனுமதி தர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம் என்று கூறினார்.

**18. திரு. சீனிவாஷ், காமையூர் கிராமம்**

திரு. சீனிவாஷ் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியானது எங்களது நிலத்திற்கு 500 – 600 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இக்குவாரி

அமைவதினால் மிகவும் பாதிப்பு ஏற்படும். மேலும், குவாரி செயல்பாட்டின் போது, வெடி வைப்பதினால், தூசினால், விவசாய பாதிப்பு ஏற்படுகிறது என்று தெரிவித்தார்.

**19. திரு. நாகராஜ் ரெட்டி, தேன்கனிக்கோட்டை**

திரு.நாகராஜ் ரெட்டி அவர்கள், ஏற்கனவே 20 வருடங்களாக இயங்கி கொண்டிருக்கும் குவாரிகள் அரசு வகுத்துள்ள வழிகாட்டுதலின்படி முறையாக இயங்கி கொண்டிருக்கிறதா? என்று ஆய்வுகள் நடத்திய பிறகு, அந்த ஆய்வில் முறையாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரிக்கு அனுமதி தரலாம். அதற்கு பொது மக்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்க போவதில்லை. ஏற்கனவே அமைந்துள்ள குவாரிகள் முறையாக இயங்காத பொழுது நீங்கள் புதியதாக ஒரு குவாரிக்கு அனுமதி தரவே கூடாது என்று இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் என் கருத்தை உறுதியாக கூறுகிறேன் என்று கூறினார்,

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள்**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரிக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் பொதுமக்கள் மனுக்கள் அளிக்கலாம் என்று தெரிவித்தார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

13

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். எஸ்.எம்.ஹரிஷ் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 43 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். எஸ்.எம்.ஹரிஷ் ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் 77 மனுக்கள் பெறப்பட்டது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

15/5/2023

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

4/7

**சார் ஆட்சியர்**
**ஓசூர்**

4/7

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**

4/7